




# ஜீவ அப்பமும் ஜீவ தண்ணீரும்

பாடம் 7 ஆகஸ்ட் 16, 2025



"அப்பொழுது கர்த்தர் மோசேயை நோக்கி: என் கட்டளைகளையும் என் பிரமாணங்களையும் கைக்கொள்ள எந்த மட்டும் மனதில்லாதிருப்பீர்கள்? பாருங்கள், கர்த்தர் உங்களுக்கு ஓய்வுநாளை அருளினபடியால், அவர் உங்களுக்கு ஆறாம் நாளில் இரண்டு நாளுக்கு வேண்டிய ஆகாரத்தைக் கொடுக்கிறார்; ஏழாம்நாளில் உங்களில் ஒருவனும் தன் தன் ஸ்தானத்திலிருந்து புறப்படாமல், அவனவன் தன் தன் ஸ்தானத்திலே இருக்கவேண்டும் என்றார். அப்படியே ஜனங்கள் ஏழாம்நாளில் ஓய்ந்திருந்தார்கள்."

யாத்திராகமம் 16:28-30






அவர்கள் இறுதியாக எகிப்தின் எல்லையை கடந்துவிட்டார்கள். பாலும் தேனும் ஓடுகிற தேசத்திற்கு செல்லும் பாதையில் இவர்கள் இறுதியாக இருந்தார்கள்.



மூன்று நாட்களுக்கு, எல்லாம் பூரணமாக இருந்தது. ஆனால் அவர்களிடம் இருந்த எல்லா பொருட்களும் தீர்ந்து போயின. பாலைவனத்தில் 20 மில்லியன் மக்களுக்கு அவர்களால் எப்படி உணவளிக்க முடியும்?

பிரச்சனையின் முதல் அறிகுறியிலேயே, ஜனங்கள் முறுமுறுக்க தொடங்கினார்கள். அவர்கள் எகிப்தில் இறந்திருக்க விரும்புவார்கள்! தெளிவாக, அவர்களின் நம்பிக்கை வளர்ந்து பலப்படுத்தப்பட வேண்டும். எனவே தேவன் அவர்களுக்கு தண்ணீரையும் அப்பத்தையும் வழங்கினார்; அவர்களின் எதிரிகளிடமிருந்து அவர்களை பாதுகாத்தார்; மேலும் அவர்கள் ஒழுங்கமைக்க உதவினார்.



- சுத்தமான தண்ணீர் (யாத் 15:22-27)
- பரலோகத்திலிருந்து அப்பம் (யாத் 16:1-36)
- ஒரேபின் கன்மலை (யாத் 17:1-7)
- உயர்த்தப்பட்ட கைகள் (யாத் 17:8-16)
- நல்ல அறிவுரை (யாத் 18:1-27)
- ஜீவ அப்பமும் ஜீவ தண்ணீரும்: இயேசு

“எபிரேயர்களின் மாறுபட்ட அனுபவங்கள், கானானில் அவர்களுக்கு வாக்குறுதியளிக்கப்பட்ட வீட்டிற்கு தயாராகும் பள்ளியாக இருந்தன. இந்த நாட்களில் தேவன் தம்முடைய ஜனங்கள் பண்டைய இஸ்ரவேலர் கடந்து வந்த சோதனைகளை மனத்தாழ்மையுடன், கற்றுக்கொள்ளக்கூடிய மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று விரும்பினார். இதனால் அவர்கள் பரம கானானுக்கு தயராகும்போது அறிவுறுத்தபடுவார்கள்.”

எலன் ஜி உவைட் (முற்பிதாக்களும் தீர்க்கதரிசிகளும், பக். 293)

# சுத்திகரிக்கப்பட்ட தண்ணீர்

"அவர்கள் மாராவிலே வந்தபோது, மாராவின் தண்ணீர் கசப்பாயிருந்ததினால் அதைக் குடிக்க அவர்களுக்குக் கூடாதிருந்தது; அதினால் அவ்விடத்துக்கு மாரா என்று பேரிடப்பட்டது" (யாத் 15:23)



தேவன் நம்மோடிருந்தால், ஏன் நமக்கு கெட்ட காரியங்கள் நடக்கிறது? செங்கடலை கடந்து பின்பு, இஸ்ரவேல் ஜனங்களின் மனநிலை இதுவாக தான் இருந்தது.

குடிப்பதற்கு பாதுகாப்பற்ற தண்ணீரை கண்டறிந்து, அவர்கள் புகார் செய்தார்கள், "என்னத்தைக் குடிப்போம்?" (யாத். 15:24). அவர்கள் வருவதற்கு முன்பே தேவன் அந்த தண்ணீரை சுத்திகரித்திருக்கலாம், ஆனால் அவர் சரியான தருணத்திற்காக காத்திருந்தார்.

மேலும் அற்புதத்தை செய்வதற்கு மோசேயிடம் ஒரு உதவி கேட்டார், தண்ணீரை சுத்திகரிக்க ஒரு மரத்தை எறிய சொன்னார் (யாத். 15:25).



தேவன் தம்முடைய பிரசன்னத்தை நாம் அறிந்திருக்கவும், தம்முடைய கட்டளைகளுக்காக காத்திருக்கவும், அவரோடு ஒத்துழைக்கவும் விரும்புகிறார்.

இஸ்ரவேலர் தேவனுடைய தேவைகளை பூர்த்தி செய்து, தேவன் தங்களுக்கு கொடுத்த சட்டங்களுக்கு கீழ்படிந்தால், அவர்கள் தீமையிலிருந்து பாதுகாக்கபடுவார்கள் என்பதில் உறுதியாக இருக்கலாம் (யாத். 15:26).

# பரலோகத்திலிருந்து வந்த அப்பம்

"இஸ்ரவேல் புத்திரர் அதைக் கண்டு, அது இன்னது என்று அறியாதிருந்து, ஒருவரை ஒருவர் பார்த்து, இது என்ன என்றார்கள்; அப்பொழுது மோசே அவர்களை நோக்கி: இது கர்த்தர் உங்களுக்குப் புசிக்கக்கொடுத்த அப்பம்." (யாத் 16:15)

இறைச்சி சாப்பிட வேண்டும் என்ற ஆசை இஸ்ரவேலரை மோசேக்கும் ஆரோனுக்கும் எதிராக முறுமுறுக்க வைத்தது(யாத். 16:2-3). ஆனால் அவர்களுடைய முறுமுறுப்பு உண்மையில் தேவனுக்கு எதிராக இருந்தது (யாத். 16:8). அவர்களுடைய பிரச்சனை தான் என்ன?

- அவர்கள் கடந்த நாட்களை மறந்துபோனார்கள்
- அவர்கள் நிகழ்காலத்தின் பிரச்சனைகளில் கவனம் செலுத்தினர்
- வாக்குறுதியளிக்கப்பட்ட எதிர்காலத்தை அவர்கள் மறந்துவிட்டார்கள்




அவர்கள் உண்பதற்கு காடைகளை கொடுத்தபிறகு, தேவன் அவர்களுக்கு ஒவ்வொரு நாளும் உணவளிக்க போதுமான மன்னாவை கொடுத்தார்... 40 வருடங்களாக! (யாத். 16:35)


பரலோகத்திலிருந்து வந்த இந்த அப்பம் உண்மையிலேயே அற்புதமாக இருந்ததது:



சூரியன் உதித்ததும் அது உருகியது (யாத் . 16:21)



ஐந்து நாட்களும் அதே அளவு விழுந்தது (யாத். 16:16)



ஆறாவது நாளில் அது இரண்டு மடங்கு அதிகமாக விழுந்தது (யாத். 16:22)



ஓய்வுநாளன்று அது விழவே இல்லை (யாத். 16:26)



மற்ற நாட்களில் அதை மறு நாளைக்கு மீதம் வைத்தால், அது பூச்சி பிடித்தது (யாத். 16:20)



ஆனால் ஆறாவது நாள் முதல் ஓய்வுநாள் வரை அது கெட்டு போகவில்லை (யாத். 16:23-24)

# ஓரேபின் கன்மலை

"அங்கே ஓரேபிலே நான் உனக்கு முன்பாகக் கன்மலையின்மேல் நிற்பேன்; நீ அந்தக் கன்மலையை அடி; அப்பொழுது ஜனங்கள் குடிக்க அதிலிருந்து தண்ணீர் புறப்படும் என்றார்; அப்படியே மோசே இஸ்ரவேல் மூப்பரின் கண்களுக்கு முன்பாகச் செய்தான்." (யாத் 17:6)

"கர்த்தர் எங்கள் நடுவில் இருக்கிறாரா இல்லையா?"(யாத். 17:7). தேவன் அவர்களுக்கு ஒவ்வொரு நாளும் வானத்திலிருந்து அப்பத்தை அனுப்பவில்லையா? அவர்களால் அதை மேகத்தில் பார்க்க முடியவில்லையா? இஸ்ரவேலர் காட்டிய அவநம்பிக்கை ஆச்சரியமளிக்கிறது. ஆனால் அவநம்பிக்கையின் உதாரணத்தில் விழாதபடி பவுல் நம்மை எச்சரிக்கிறார்(எபி. 3:12).

அவர்களுக்கு நம்பிக்கையின்மை இருந்தபோதிலும், இயேசு தாமே பாறையை பிளந்து, அவர்களுடைய பயணம் முழுவதும் அவர்களுக்கு தண்ணீர் வழங்கி கொண்டிருந்தார். "அவர்களோடேகூடச் சென்ற ஞானக்கன்மலை" கிறிஸ்துவே(1 கொரி. 10:4).

அவர்களுக்கும், நமக்கும், கிறிஸ்துவே ஜீவனின் ஊற்றாகவும், நித்திய ஜீவனை கொடுப்பவராகவும் இருக்கிறார்.



# உயர்த்தப்பட்ட கைகள்

"அமலேக்கியர் வந்து ரெவிதீமிலே இஸ்ரவேலரோடே யுத்தம்பண்ணினார்கள்." (யாத் 17:8)



அவர்கள் வனாந்தரத்தின் வழியாய் முன்னேறி செல்லும்போது, அமலேக்கியர் இஸ்ரவேலரை தாக்கினர், மோசே யோசுவாவிடம் அவர்களை பாதுகாக்கும்படி கேட்டார், அதே நேரத்தில் அவர், ஆரோன், ஊர் மற்றும் "தேவனுடைய கோலுடன்" மலைக்கு ஏறி சென்றார் (யாத். 17:8-10).


ஏன் அமலேக்கியர்கள் வந்து தாக்கினார்கள்? எகிப்தில் தேவன் செய்ததை அவர்கள் கேள்விப்பட்டிருந்தார்கள். ஆனால், மற்ற கானானியர்களை போல, அவர்கள் பயப்படவில்லை. அவர்கள் தேவனை ஏளனம் செய்து, அவருடைய மக்களை தாக்கி, அவரை விட வலிமையானவர்கள் என்பதை நிரூபிக்க அவர்கள் முயன்றனர் (யாத். 17:16). மோசே தேவனுடைய கோலை உயர்த்திய வரை, இஸ்ரவேல் வென்றது. ஆனால் அவரது கைகள் சோர்வடைந்தபோது, இஸ்ரவேல் தோற்கடிக்கப்பட்டது (யாத். 17:11).

மற்ற தலைவர்களும் பணிசுமையை பகிர்ந்து கொள்ள வேண்டிய நேரம் அது. ஆரோனும் ஊரும் மோசேயை ஆதரித்து, தேவனுடைய வேலையை வெற்றிகரமாக செய்ய அவருக்கு உதவினார்கள், இதனால் எதிரியை தோற்கடித்தார்கள் (யாத். 17:12).



# நல்ல அறிவுரை

“ஜனங்கள் எல்லாருக்குள்ளும் தேவனுக்குப் பயந்தவர்களும் உண்மையுள்ளவர்களும் பொருளாசையை வெறுக்கிறவர்களுமான திறமையுள்ள மனிதரைத் தெரிந்துகொண்டு, அவர்களை ஆயிரம்பேருக்கு அதிபதிகளாகவும், நூறுபேருக்கு அதிபதிகளாகவும், ஐம்பதுபேருக்கு அதிபதிகளாகவும், பத்துப்பேருக்கு அதிபதிகளாகவும் ஏற்படுத்தும்.” (யாத் 18:21)




மோசேக்கு தேவன் அறிவித்த அடையாளத்தைப் பார்த்த எத்திரோ, சிப்போராளுடனும் அவளுடைய பிள்ளைகளுடனும் ஒரேபில் மோசேயை பார்க்க சென்றார் (யாத். 3:12; 18:1-5).

எத்திரோ, இஸ்ரவேலனாக இல்லாவிட்டாலும், தேவனை வணங்கினார். எனவே, எகிப்தில் நடந்தவைகளை பற்றிய மோசேயின் அறிக்கையை பெற்றப் பிறகு, தேவனை புகழ்ந்து அவருக்கு பலிகளை செலுத்தினார் (யாத். 18:8-12).

மறு நாள், மோசே எல்லா மக்களையும் தனியாக நியாயந்தீர்ப்பதை பார்த்தப் பின், அவர் அவருக்கு சில ஞானமான ஆலோசனைகளை வழங்கினார்: பொறுப்புகளை பகிர்ந்துகொள்ளுங்கள்.(யாத். 18:17-23).

இந்த அறிவுரையில் தேவனுடைய வார்த்தைகளை மோசே தாழ்மையுடன் ஏற்றுக்கொண்டார். எனவே, அவர் தனது மாமனாரின் ஆலோசனையை கேட்டு, பொறுப்புகளை சுமக்க தகுதியானவர்களை தேர்ந்தெடுத்தார்.


**அதன் பண்புகள் (யாத். 18:21):**

- தேவனை மதித்தல்
- நம்பிக்கைக்குரியவர்களாய் இருத்தல்
- பரிதானத்தை வெறுத்தல்



# ஜீவ அப்பமும் ஜீவ தண்ணீரும்: இயேசு

"நானே வானத்திலிருந்திறங்கின ஜீவ அப்பம்; இந்த அப்பத்தைப் புசிக்கிறவன் என்றென்றைக்கும் பிழைப்பான்; நான் கொடுக்கும் அப்பம் உலகத்தின் ஜீவனுக்காக நான் கொடுக்கும் என் மாம்சமே என்றார்." (யோவான் 6:51)



யாத்திராகமக் கதைகள் நமக்கு அறிவுறுத்துவதற்காக எழுதப்பட்டவை என்று பவுல் நமக்கு சொல்கிறார், அதாவது, அவை நம் வாழ்க்கைக்கு ஆன்மீகப் பயன்பாட்டை கொண்டுள்ளன (1 கொரி. 10:1-11).

இந்த கதைகள் பேராசை, விக்கிரக ஆராதனை, வேசித்தனம், தேவனை சோதித்தல் மற்றும் வீண்பேச்சு ஆகியவற்றிற்கு எதிராக நம்மை எச்சரிக்கின்றன



மேலும், பாறையிலிருந்து தண்ணீர் மற்றும் வானத்திலிருந்து வந்த அப்பம் பற்றிய கதைகளை இயேசு குறிப்பாக தமக்கு பொருத்திக் கொண்டார்.

பரிசுத்த ஆவியானவரை அடையாளப்படுத்தும் ஜீவ தண்ணீரை வழங்குபவர் அவரே(யோ. 4:14; 7:37-39). சமாதானம், சந்தோஷம் மற்றும் மகிழ்ச்சிக்கான நமது உள்தாகத்தை தீர்த்து வைக்கக்கூடிய ஒரே நபர் அவர்தான்.





இயேசு, தான் தான் பரலோகத்திலிருந்து இறங்கி வந்த மெய்யான அப்பம் என்றார். அந்த அப்பம் அவருடைய சொந்த மாம்சமே (யோவான் 6:51). அது அவருடைய சரீரம், அது சிலுவையில் உடைக்கப்பட்டு, அதை "உட்கொள்ளும்" அனைவருக்கும் இரட்சிப்பை கொண்டுவருகிறது—அதாவது, அவரை இரட்சகராக ஏற்றுக்கொண்டு அவருடன் தினமும் உறவு கொண்டிருங்கள். நமது ஆன்மீக தாகத்தையும் பசியையும் கிறிஸ்துவால் மட்டுமே பூர்த்தி செய்ய முடியும்.